IN THE COURT OF THE SUBORDINATE(SUB JUDGE), KANGAYAM

| MCOP.NO.225/2022 |
| --- |
| PW -1 |

Deposition of Witness.

| Name/பெயர் | வீராச்சாமி | Father's Name/ தந்தை பெயர் | |
| --- | --- | --- | --- |
| Village/கிராமம் | | Taluk/வட்டம் | |
| Calling/தொழில் | | District/மாவட்டம் | |
| Date/தேதி | 28.07.2026 | Age/வயது | |

Solemnly affirmed by in accordance with the provision of the Indian Oath Act 44 of 1969, on 28.07.2026 at 12.15 p.m to 12.25 p.m.

**2 ஆம் எதிர்மனுதாரர் சார்பாக குறுக்கு விசாரணை:**

1. மனுதாரர் கேட்டுக் கொண்டதற்காகத்தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நீதிமன்றத்தில் இருந்து தனிப்பட்ட அழைப்பாணை எதுவும் சார்பு செய்யப்படவில்லை. நானும், விபத்தில் இறந்து போனவரும் ஒரே ஊரைச் சார்ந்தவர்கள். விபத்து சம்பந்தமாக நான் காவல் நிலையம் சென்று புகார் எதுவும் கொடுக்கவில்லை. விபத்து நடந்த போது சோமசுந்தரம் சுயநினைவோடு தான் இருந்தார். விபத்து குறித்து முதல் தகவல் அறிக்கை யார் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது.

2. மேற்படி விபத்து குறித்து காயம் அடைந்த சோமசுந்தரம் தான் புகாரை கொடுத்தார் என்றால் சரிதான் மேலும் விபத்திற்கு பின்னிட்டு அவருடைய சகோதரருக்கு அவரே அழைத்து விபரத்தை சொல்லியுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி சோமசுந்தரம் அவர்களே விபத்து சமயத்தில் நான் இருந்ததாக சொல்லாத நிலையில் விபத்தை நான் பார்த்ததாக சொல்வது முற்றிலும் தவறான சந்ததி என்றால் சரியல்ல.

மேற்படி விபத்து நடந்ததை நேரடியாக பார்க்காமல் ஸ்கூட்டி ஓட்டுனரின் அஜாக்கிரதையால் விபத்து நடந்தது என்று நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது தவறு.

3. மேற்படி விபத்திற்கு காரணமே சோமசுந்தரம் தான் என்றும் அவர்தான் அஜாக்கிரதையாக வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தினார் என்றும் அந்த விவரம் தெரிந்தும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி விபத்து சமயத்தில் நான் கண்ணுற்ற சாட்சியாக இருந்தேன் என்பதற்கு எந்த ஆவணமும் நான் முன்னுரித்தவில்லை என்றால் சரியல்ல.

**மேற்படி குறுக்கு விசாரணையை முதல் எதிர்மனுதாரர் ஏற்றுக் கொள்கிறார்.**

**3 ஆம் எதிர்மனுதாரர் சார்பாக குறுக்கு விசாரணை**

4. மேற்படி விபத்து இருசக்கர வாகனமான TN42S 7584 என்ற ஸ்கூட்டி ஓட்டுனரின் கவனக் குறைவால் தான் நிகழ்ந்தது என்றும் அந்த விபத்திற்கு சோமசுந்தரம் காரணம் அல்ல என்றால் சரிதான்.

Signature of the witness.

Taken down before me in open Court, read over to the witness and admitted to be correct.

K ANANTHAN

Digitally signed by K ANANTHAN
Date: 2026.07.28 19:09:09 +0530

**Subordinate Judge,**
**Subordinate Court,**
**Kangayam.**